DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 1/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கௌசல்யா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | இளங்கோவன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை போடிப்பட்டியில் வசித்து வருகிறேன். விக்டஸ் கார்மெண்ட்ஸ்ஸில் திட்ட மேலாளராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன். ஆஜர் எதிரிகள் முறையே மாமனார் மாமியார் எனது கணவர் ஆவார்கள். ஒன்றாக தான் குடியிருநது வருகிறோம் கருத்து வேறுபாடு காரணமாக புகார் கொடுத்திருந்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தஎன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியாது. **புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது**. ஆகையால் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று கனம் நீதிமன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக**

**கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 9 வருடங்களுககு முன் எனக்கும் ஆஜர் எதிரி இளங்கோவன் என்பவருக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணத்திற்கு பிறகு போடிப்பட்டி பாரதி நகரில் குடும்பத்துடன் வசித்துவந்த போது எனக்கும் எதிரி இளங்கோவன் என்பவரும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும், அதனால் என் கணவர் இளங்கோவன் விவாகரத்து வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றும், கடந்த 29.02.2024 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் வீட்டில் பேசி கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் சாட்சிகள் ஜெய்தூன் பீவி மற்றும் சத்யா ஆகியோருடன் எனது வீட்டிற்கு வந்தார் என்றும், அவர்கள் ஆவேசமாக வந்ததால் நான் பயந்து போய் வீட்டின் கதவை உட்பக்கமாக தாளிட்டு கொண்டேன் என்றும், அங்கு வந்த ஆஜர் எதிரிகள் சொத்து பத்திரத்தை தர சொல்லி தகாத வார்த்தையால் திட்டினார்கள் என்றும், என்னையும் எனது அம்மா மங்கம்மாள் தகாத வார்த்தையால் திட்டி வீட்டிற்குள் நுழைந்து எனது தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து உதைத்தனர் என்றும், கீழே கிடந்த அம்மிக்கல் மீது தள்ளி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், சொத்து பத்திரத்தையும் தரவில்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்றும், என்னையும் என் அம்மாவையும் மிரட்டினார்கள் என்றும், புகார் வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது குடும்ப நலன் கருதியும் குழந்தைகள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் ஆஜர் எதிரிகளுடன் ஒன்றாக வாழ்வதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.1 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மங்கம்மாள் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் குரல்குட்டையில் வசித்து வருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன். அசா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள் முறையே எனது மருமகன் மற்றும் சம்மந்திகள் ஆவார்கள். கருத்து வேறுபாடு காரணமாக என் மகள் புகார் கொடுத்திருந்தார். குடும்ப நலன் கருதி என் மகள் ஒன்றாக வாழ்ந்து வருவதாலும் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று கனம் நீதிமன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 9 வருடங்களுகக்கு முன் என் மகளுக்கும் ஆஜர் எதிரி இளங்கோவன் என்பவருக்கும் திருமணம் நடந்தது என்றும்,

திருமணத்திற்கு பிறகு போடிப்ப்டி பாரதி நகரில் குடும்பத்துடன் வசித்து வந்த போது என் மகளுக்கும் எதிரி இளங்கோவன் என்பவரும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும், அதனால் என் மருமகன் இளங்கோவன் விவாகரத்து வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றும், கடந்த 2902.2024 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் கௌசல்யாவுடன் வீட்டில் பேசி கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் சாட்சிகள் ஜெய்தூன் பீவி மற்றும் சத்யா ஆகியோருடன் எனது வீட்டிற்கு வந்தார்எ ன்றும் அவர்கள் ஆவேசமாக வந்ததால் நாங்கள் பயந்து போய் வீட்டின் கதவை உட்பக்கமாக தாளிட்டு கொண்டேன் என்றும், அங்கு வந்த ஆஜர் எதிரிகள் சொத்து பத்திரத்தை தர சொல்லி தகாத வார்த்தையால் திட்டினார்கள் என்றும், என்னையும் எனது மகளான அசா.1 ஐயும் தகாத வார்த்தையால் திட்டி வீட்டிற்குள் நுழைந்து அசா.1 ன் தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து உதைத்தனர் என்றும், கீழே கிடந்த அம்மிக்கல் மீது அசா.1 ஐ தள்ளி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், சொத்து பத்திரத்தையும் தரவில்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்றும் என்னையும் அசா.1 யும் மிரட்டினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது குடும்ப நலன் கருதியும் எனது மகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் ஆஜர் எதிரிகளுடன் ஒன்றாக வாழ்வதால் அவர்களுகக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.